★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 11௳ செவ்வாய் (24—1—56) ★ ★ வெளியூர்: தை 12௳ புதன் (25—1—56) [இதழ் 190

மணிக்கு ஆயிரம் மைல் பறக்கும் விமானம்

வாஷிங்டன், ஜன. 3—

இரட்டை 'ஜெட்' 'என்ஜின்' பொருத்தப்பட்ட 'மக் டோனல்' விமானம் ஒன்று மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் பறந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

1,100 மைல் வேகத்தில் ஒரு முறையும், 1,050 மைல் வேகத்தில் 5 தடவைகளுக்கு மேலும் பறந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

காமராசர் முகத்தில் கரி பூசுகிருர்!

தலைமை நிலையச் செய்தி

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தம் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு 21—1—56-ல் சென்னை வந்துசேர்ந்தவுடன், தலைமை நிலையத்தில் தோழர்கள் சி. என். அண்ணுதுரை, என். வி. நடராசன் ஆகியவர்களோடு, தேவிகுளம்—பீர்மேடு போன்ற தமிழகத்தோடு இணைய வேண்டிய பகுதிகளின் பிரச்சினைகள்பற்றி உரையாடல் நடத்தினர். தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள், தாம் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களோடும், தோழர்கள் மு. வரதராசன், சுப்பையா ஆகியவர்களோடும் பேசிய பேச்சின் விபரத்தைப் பொதுச்செயலாளரிடம் எடுத்துக்கூறினர்கள்.

21—1—56 மாலை, தோழர் பிளெச்சர் அவர்கள் பொதுச்செயலாளரையும், தோழர் அண்ணுதுரை அவர்களையும் தலைமை நிலையத்தில் கண்டு திரு—கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகளின் நிலைமைகள் குறித்து விளக்கந்தந்தார்.

★

22—1—56-ல், பிற மாநிலங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளைப் புதிதாக அமையப்போகும் தமிழகத்தோடு இணைப்பதற்கான முயற்சிகளை, மத்திய அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடத்துவதின்மூலம் எடுக்கவேண்டிய சர்வகட்சிக் கூட்டு முன்னணி அமைக்கும் முன் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச்செயலாளரும, தோழர் சி. என். அண்ணுதுரை அவர்களும் கலந்துகொண்டனர். அந்தக் கூட்டத்தில் தோழர்கள் ம. பொ. சிவஞானம், எல். எஸ். கரையாளர், எம். ஆர். வெங்கடராமன், ப. ஜீவானந்தம், எஸ். பி. ஆதித்தன், பிளெச்சர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

★

பிற கட்சித் தலைவர்களோடும், கழகத்தின் முன்னணியாளர்களோடும் கலந்துபேசி எடுக்கும் முடிவுகளை, 29—1—56-ல் சிதம்பரத்தில் கூட இருக்கும் தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் விளக்கிக் கூறி ஆவன செய்ய பொதுச்செயலாளர் முற்படக் கூடும்.

★

27—1—56-ல், சர்வ கட்சி ஆலோசனை மாநாடு கூட்டும் முயற்சிக்குப் பொதுச்செயலாளர் ஆதரவளித்திருக்கிருர். இது போன்றே வேறு முனைகளிலிருந்தும் கூட்டு மாநாடு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவை பற்றியும் பொதுச்செயலாளருடன் பலர் கலந்து பேசிவருகின்றனர்.

★

28-ந் தேதியன்று, இந்தி ஆதிக்க ஒழிப்பு குறித்து ஒத்த கருத்துக்கொண்டோர் கூடி, ஆங்கிலமே பொது மொழியாக இருக்கலாம் என்பதை வலியுறுத்த ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தக்கூடும்; ஏற்கனவே இக்கருத்தினை வெளியிட்டிருக்கும் ஆச்சாரியார் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிருர் என்றும், பெரியாரும் கலந்துகொள்கிருர் என்றும் கூறி பொதுச்செயலாளரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு கிடைத்திருக்கிறது. பொதுச்செயலாளரும் கலந்துகொள்ள இசைவு அளித்திருக்கிருர்.

★

மத்திய ஆட்சியின் போக்கை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் படப் போஸ்டர் வெளியிடுவது பற்றிய முன்னேற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டுள்ளன.

★

தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினை பற்றிக் கழக முக்கியஸ்தர்களின் கருத்து அறிவதற்காக ஓர் ஆய்வுரைக் கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

★

இதற்கிடையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டனக் கூட்டம், ஊர்வலம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கழகத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

ஆச்சாரியாரின் தட்சிணப் பிரதேசம் கிளம்புகிறது

ஆண்டவனே! கோவிந்தா......!

திருப்பதி, ஜன. 22—

"ஆண்டவனே! கோவிந்தா! திருப்பதி சாமியே! நீயே வாங்கிக்கொள்; என்னால் இயலவில்லை—நீயேனும் முயற்சித்துப் பார்—வசூல் செய்ய! கடன் கொடுத்தேன். 'கோவிந்தா'வாகப் போய்விட்டது! இதோ 'புரோ நோட்டு'கள்",—என்று, கடன் கொடுத்தப் பெருமக்கள், திருப்பதி கோவிலுக்கு 'புரோ நோட்டு'களை அனுப்பிவைத்திருக்கின்றனராம்!

கோவில் அதிகாரி, நிர்வாகக் குழுவினரிடத்தில், இந்த 'புரோ நோட்டு'களை எழுதிக் கொடுத்தவரிடமிருந்து பணத்தை வசூல் செய்துகொள்ள அனுமதி கோரியதுடன், வசூல் செய்வதற்காக வழக்குத் தொடர்தல் போன்றவற்றிற்காகும் செலவுக்குப் பணமும் கோரினராம்!

நிர்வாகக் குழுவினரும், கோவில் அதிகாரிக்கு அவ்வாறே அனுமதி வழங்கியுள்ளனராம்.

'புரோ நோட்டு'களை எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கி, கடனைத் திருப்பித் தராமல் 'கோவிந்தன் நாமம்' இட்டியவர்கள்மீது வழக்குத் தொடரப் படுமாம், திருப்பதி சாமியின் பெயரால்!

தேஷ்முக் விலகுகிருர்?

இந்தியப் பேரரசின் நிதி மந்திரியான சிந்தாமண் தேஷ்முக், மராட்டிய காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, தனது பதவியை 'இராஜிநாமா'ச் செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. ஆனால், இந்தச் செய்தியை எவரும் உறுதி செய்யவில்லையாம்!

கேரளத்து மேனன்-மைசூர் அனுமந்தா பரவசம்?

'சலாம்போடும் குலாம்' வேலைக்குக் காமராசர்!!

(டில்லி தகவல்)

'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது'—என்பது, பழமொழி!

'மொழிவழி அரசு ஏற்படுத்தப்போய், தட்சிணப் பிரதேசம் கிளம்பிற்று'—என்பது, புதுமொழி!

நாடு சீறுகிறது—புரட்சி வீசுகிறது—பொறுப்பற்றப் போக்கிலே நேரு சர்க்கார் அளித்துள்ள அநீதி கண்டு!

பட்டாளத்தின் துணை கொண்டுதான் மந்திரிகள் நடமாட முடிகிறது!

இந்நிலையில், 'தோல்வி'யை ஒப்புக்கொள்ளத் துணிவின்றி, வேறோர் குறுக்கு வழி தேடுகிறது, நேரு சர்க்கார்!

மாநிலப் புனரமைப்புக் குழுவின் திட்டத்தைத் தாங்களே குழி தோண்டிப் புதைக்கும்விதத்தில், 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்துக்கு உயிரூட்டி, உலவ விடுகிருர்கள்!

காமராசர், 'எசமான் சொற்படி' என்று கூறிவிட்டாராம்!

கேரளத்து மேனன், 'சரி முதலாளி! என்னோட சம்மதம் எப்பவும் உண்டல்ல........' என்கிருராம்!

'அடிக்கப் போகுது பிரைஸ்!' என்று ஆனந்தப்படுகிருராம், மைசூர் அனுமந்தய்யா!

ஏனெனில், மைசூர்—சென்னை—கேரளம் மூன்றும் கொண்ட ஒரு 'தட்சிணப் பிரதேசம்' அமைந்தால், அனுமந்தய்யாவுக்குத்தான் அரசாளும் 'சான்சு'—மேனன் அவருக்குச் 'சகா' ஆகிவிட முடியும்—நம்ம காமராசர், மந்திரி சபையில் இருக்க நேரிட்டால், மற்றவர்களுக்குச் 'சலாம் போடும் குலாம்' ஆகத்தான் இருக்க முடியும்.

ஆச்சாரியார், விழுந்து விழுந்து சிரிக்கிருராம்!

காமராசர் முகத்தில் கரி பூசுகிருர் அல்லவா?-அதனால்!

இனி, தேவிகுளம்-பீர்மேடு யாருக்கு என்பதுமட்டுமா பிரச்சினை?

தமிழ் நாடா? தட்சிணப் பிரதேசமா?—என்ற பயங்கரப் பிரச்சினை கிளம்புகிறது!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் மாலைக்கட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில் நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள்:

(1) மாநில மாநாடு

(2) கழகச் சட்டதிட்டம் திருத்தம் செய்தல்

(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்

(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மந்திரி சுப்பிரமணியம் வாய் திறக்கிருர்!

"தேவிகுளம், பீர்மேடு போன்ற தாலூகாக்கள் குறித்து மேலிடத்தவர் தந்துவிட்ட தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுவதுதான் முறையே தவிர, அந்தத் தீர்ப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்துவதை நாங்கள் அனுமதிக்க முடியாது" என்று நிதிமந்திரி சுப்பிரமணியனுர் தெரிவித்திருக்கிருர்.

டில்லி தீர்ப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதையும் அவர் கண்டித்தாராம்!

லூதியானுவில்...

லூதியானுவில், மகா பஞ்சாப் மாநிலம் அமையவேண்டும் என்று கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—1—'56 செவ்வாய்

பம்பாயிலா இருக்கிறார்?

★

தமிழர்களே பெரும் எண்ணிக்கையினராக உள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் திரு—கொச்சியிலேயே இருக்கும்படி இந்தியப் பேரரசு தீர்மானித்துவிட்டது. அந்தத் தீர்ப்பு அநீதியானது என்று தமிழர்கள் கொதித்திருக்கின்றனர்.

அதிக்கிரமமானத் தீர்ப்பளித்த இந்தியப் பேரரசைப் பணியவைக்க, தமிழர்களின் கொதிப்பை அமைதியான முறையில் செயல்படுத்தத் தமிழ்ப் பற்றும், பொறுப்புணர்ச்சியும் உள்ள தமிழ்த் தலைவர்கள் முயற்சித்து வருகின்றனர். நன்கு சிந்தித்துச் சிறந்த பலம் பொருந்திய அடிப்படையில் உருவாக்கப்பட இருக்கும் அவ்வெதிர்ப்பு முனை, இந்தியப் பேரரசைப் பணிய வைப்பதில் கணிசமாக வெற்றி பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை.

சென்னையுடன் இணைக்கப்படவேண்டிய திரு—கொச்சித் தமிழ்ப் பகுதிகளைக் குறித்துத் தீர்மானம் மூலம் அறிவித்த சென்னைஆட்சியின் முதலமைச்சரான கனம் காமராசர் டெல்லி சென்றிருக்கிறார். அவர் இன்னும் தலைநகர் திரும்பவில்லை. அநியாயத் தீர்ப்பளித்த டெல்லி ஆதிபத்தியத்திடமிருந்துத் தமிழர்களுக்கு அவர் என்ன செய்தி கொண்டுவர இருக்கிறார் என்பது மூடுமந்திரமாகவே இருக்கிறது.

இதற்கிடையில், இந்தியப் பேரரசின் நேர்மையற்ற முடிவு குறித்து வாய் திறவாமல் இருப்பதுதான் சென்னை அமைச்சர்களுக்கு அறிவுடைமையாகும். ஆனால் அமைச்சர் பக்தவத்சலமோ, அக்கூட்டத்திற்கும் தனக்கும் துளியும் தொடர்பில்லை எனக் காட்டிக் கொள்ளும் வகையில், வாய் திறந்து கண்டபடி உளறிவழிந்திருக்கிறார்.

அமைச்சர் பக்தவத்சலம், இவ்வாறு உளறிவழிவதற்கு எது காரணமாக இருக்கக் கூடும் என்பதை ஒவ்வொருவரும் எண்ணுவது இயற்கையேயாகும்.

சென்னையில் இருப்பதால்தான் அவ்வாறு அமைச்சரால் உளற முடிகிறது; பம்பாயில் இருந்தால் அவரால் அப்படி உளறுவது முடியாது என்றே பொருளறிவு படைத்தவர் அனைவரும் கருதுவர். அமைச்சர் பக்தவத்சலம் பம்பாயில் இல்லாது சென்னையில் இருக்கிற காரணத்தால்தான் இவ்வளவு பதட்டமாகப் பிதற்றுகிறார் என்றே நாமும் எண்ணுகிறோம்.

இந்தியப் பேரரசின் நியாய விரோதமானத் தீர்ப்பை எதிர்ப்பவர்கள் அனைவரையும் அவர் ஏசுகிறார்; 'அரசியலில் செல்வாக்கிழந்தவர்கள்' என அவர் தூற்றுகிறார். அமைச்சர் பக்தவத்சலனாருக்குத் தமிழ் மக்களிடமுள்ள அபரிமிதமான செல்வாக்கைத் தெரிந்தவர்கள், எதிர்ப்பாளர்களைக் குறித்து அவர் தூற்றுவதை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள். அவை வெறும் கழிவுக் கூடைக்குச்சரக்கென்றே ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள்.

இந்தியப் பேரரசின் துரோக முடிவை எதிர்ப்பவர்களை, செல்வாக்கிழந்தவர்கள் எனத் தூற்றும் அமைச்சர் பக்தவத்சலனாருக்கு, டெல்லி ஆதிபத்தியத்திடம் உள்ள செல்வாக்கு என்ன என்பது சிந்திக்கத்தக்கது. அமைச்சரின் செல்வாக்கை அறிந்துகொள்ள, தமிழரின் நியாயமான கோரிக்கைக்கு டெல்லி ஆதிபத்தியம் தந்த முடிவு ஒன்றே போதுமானதாகும்.

தனது சொல்லைப்பமறுத்து அலட்சியப்படுத்திவிட்ட டெல்லி ஆதிபத்தியத்தின்மீது அமைச்சர் பக்தவத்சலத்திற்கு இதற்குள்ளாகக் கோபம் பிறந்திருக்க வேண்டும். அதன் விளைவாக அமைச்சர் பதவியையும் அவர் துறந்திருக்க வேண்டும். மானமுள்ளவர் இதைத்தான் செய்திருக்க வேண்டும்.

அந்தச் சாதாரணமான சிறு செயலையா, பெரும் செல்வாக்குப் படைத்த இந்த அமைச்சர் பக்தவத்சலனாரிடம் எதிர்பார்ப்பது? அமைச்சர் பீடத்தில் அவர் ஏற்றப்பட்ட சேதியே ஒரு சோகக் கதையாக இருக்கும்பொழுது, தமிழர்களின் எதிர்கால நலன் பாதிக்கப்படும் அற்ப காரியத்திற்காக, அமைச்சர் பக்தவத்சலனார் பதவியைத் துறப்பார் என எதிர்பார்க்க முடியுமா?

அமைச்சர் பதவியைப் பெற அவர் பட்ட பாட்டினை எண்ணும்பொழுது, பதவியை விட்டு விடும்படியாக அவரைக் கேட்க, உண்மை அறிந்த எவருக்கும் தயக்கம் இருக்கத்தான் இருக்கும். அப்படித் துணிந்து கேட்டுவிட்டாலும், பதவியைப் பெற எடுத்துக் கொண்ட கடும் முயற்சியில் உள்ள சிரமத்தை நன்கு அறிந்துள்ள அவரா அமைச்சர் பதவியைத் துறந்துவிடுவார்?

அவர் பதவியை விடாது அதிலேயே ஒட்டிக்கொண்டு கிடந்தாலும் கிடக்கட்டும்; இந்தியப் பேரரசின் தீர்ப்புக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ வாய் திறவாமல் அமைச்சர் பக்தவத்சலம் இருந்திருப்பாரானால், அவரைக் குறித்து நாமும் கவலை கொள்ளாமல் இருந்துவிடலாம். செருகிவைத்த அகப்பைபோல் அமைச்சர் பக்தவத்சலம், இந்தியப் பேரரசிற்குப் பரிந்து பேசக் கிளம்புவதுதான் நமக்கு வேதனை தருவதாக இருக்கிறது.

இந்தியப் பேரரசைப் புகழ்ந்தும், 'அதன் முடிவை எதிர்க்கும் பொறுப்புள்ள தமிழர்களைத் தூற்றியும் அமைச்சர் பக்தவத்சலம் உளறி வழிகிறார். ஏன் அவ்வாறு அமைச்சர் செய்யமாட்டார்? அவர் என்ன பம்பாயிலா இருக்கிறார், அவர் செய்துள்ளதுபோல், தமிழர்களை டில்லி ஆதிபத்தியத்திடம் காட்டிக் கொடுக்காமல் இருப்பதற்கு?

அவரும் பம்பாயில் இருந்து, இவ்வாறு பிதற்றி இருப்பாரானால், இதுவரை அவர் கதி எதுவாக இருக்கும் என்பதை யூகித்து அறிந்துகொள்ளும் பணியை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

மன்னருக்கு ஆண் வாரிசு ஏற்படாவிட்டால்!

லிபிய மக்கள் அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுப்பர்!

பாலைவன நாடான லிபியாவின் மக்கள், நாட்டு மன்னரான இட்ரீஸ் எல்செனுசிக்கு சந்ததி இல்லாது போகுமானால், தங்களின் எதிர்கால அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

இரண்டு கிழமைகளுக்கு முன்புதான் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபையின் முதல்கூட்டத்தில் பேசுகையில் பிரதமரான முஸ்தாபா பென் ஹலீம் இந்த நல்ல சேதியைத் தெரிவித்தாராம்.

வாரிசு இன்றி மன்னர் இறந்துவிட்டால் அரசாளுகைக்கு ஒரு குழு நியமிக்கச் சட்டம் இயற்றப்படும் என்றும், அந்தக் குழுவினர் பின்பு, மக்களே தங்கள் அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு கோருவர் என்றும் பிரதமர் கூறினார்.

'ஆண் வாரிசு தருக' என்று மக்கள் சபை கேட்டதற்கிணங்க, மன்னர் இட்ரிஸ், கடந்த ஜூன் திங்களில், கெய்ரோவைச் சேர்ந்த அலியா அப்தெல்லாம் தென் என்ற 37 வயதுப் பெண்மணியை மணந்துகொண்டிருக்கிறார், இரண்டாம் தாரமாக!

முதல் தாரமான, பதிமா 20 ஆண்டுகளாக இராணியாக இருப்பவர் என்றும், அவர் பெற்றெடுத்த ஒரே ஆண்மகவு கடந்த 1953-ம் ஆண்டில் சிறு வயதிலேயே இறந்துபட்டது என்றும் கூறப்படுகிறது

'தமிழ் நாடு காங்கிரசின் காட்டிக்கொடுக்கும் போக்கு'

'திரு-கொச்சித் தமிழர்களை 'ஓநாய்'களுக்கு விட்டுக்கொடுத்துவிட்டனர்'

குஞ்சன் நாடார் கொதிப்பு

"திரு—கொச்சி தமிழ்ப் பிரதேசத்தின்மீது மத்திய சர்க்கார் தந்துள்ள தீர்ப்பு, நம்மைத் திடுக்கிடவைத்துவிட்டது. ஜனநாயக உரிமைக்கும், ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் எதிராக அத்தீர்ப்பு அமைந்துள்ளது. கேரளர்களின் பொறியில் டில்லி, சென்னை காங்கிரஸ்காரர்கள் சிக்கிவிட்டனர்; அவர்கள் சதியில் மயங்கிவிட்டனர்; திருவாங்கூர் தமிழர்களை ஓநாய்க்கு விட்டுக் கொடுக்கத் தீர்மானித்துவிட்டனர்.

"திருவாங்கூர் தமிழ்நாடு பிரச்சினை கேரளத்திற்கும்—சென்னைக்குமுள்ள பிரச்சினையாக இருக்கக்கூடாது; அங்குள்ள மக்களின் நலன்களைத்தான் பார்க்க வேண்டும்.

"சென்னைக் காங்கிரஸ் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் திருவாங்கூர் தமிழர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டனர்.

"நெய்யாற்றின்கரை, (கொச்சி) சித்தூர் தமிழர்களின் உரிமையைக் கோருவதற்கே அவர்கள் முதலில் இணங்கவில்லை. கடைசியாகச் செங்கோட்டையின் பெரும் பகுதியையும் மலையாளிகளுக்கு விற்கத் துணிந்துவிட்டனர்

"சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமல் எந்தத் தாலுகாவையும் துண்டாடவில்லை—என்று சர்க்கார் கூறுகிறது; அப்படியானால், செங்கோட்டைத் தீர்ப்புமீது சென்னைத் தலைவர்கள் சம்மதித்ததாகவே தெரிகிறது.

"கண்ணீரையும், இரத்தத்தையும், உயிரையும் கொடுத்து திருவாங்கூர் தமிழர்கள் பெற்ற 5 தாலுகாக்களின் ஒரு பகுதியை இருதயமற்ற ரீதியில் சென்னைக்காரர்கள் விட்டுக் கொடுத்திருக்கின்றனர். இதுமாதிரியான சதி வேறு ஒன்றும் இருக்க முடியாது; இதைத் தமிழர்கள் பொறுக்க மாட்டார்கள். இந்தச் சதியை—அநீதியை முறியடிக்க தமிழகத்திலுள்ள எல்லா ஜனநாயக சக்திகளும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்"

—என்று, ஏ. குஞ்சன் நாடார், எம்.எல்.ஏ., அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

★

'தமிழர் போராட வேண்டும்'

டாக்டர் சுப்பராயன் குரல் கொடுக்கிறார்

திருவனந்தபுரம், ஜன. 18—

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள், தமிழ்நாட்டின் ஒரு பகுதியேயாகும்; தமிழ் நாட்டு மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்யப்போகிறார்கள்; இனியும் தேவிகுளம், பீர்மேட்டுத தமிழர் இயக்கம் பலப்பட வேண்டும்;

"சிறுபான்மைத் தமிழர்களையும் உடன் வைத்துக் கொண்டு கேரள சர்க்கார் பலவந்தமாகச் செயலாற்ற முடியாது; தொடர்ந்து தமிழர்கள் கிளர்ச்சி செய்யும்போது தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழ் நாட்டோடு ஒன்றாகச் சேர்ந்துவிடுவது உறுதியாகும்."

—இவ்வாறு அரசாங்க மொழிக் குழு உறுப்பினர் டாக்டர் சுப்பராயன் எம்.பி. அவர்கள் பொங்கல் விழாப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்

சென்னை பஸ் போக்குவரத்து இலாகா

கௌரவ நிர்வாகத் தலைவராக தேவசகாயம் நியமனம்

சென்னை, ஜன 21—

சென்னை சர்க்கார், பஸ் போக்குவரத்து இலாகாவிற்கு ஒரு கௌரவ நிர்வாகத் தலைவரை நியமித்திருக்கின்றனராம். இதுவரை சம்பளம் பெற்ற இந்திய நிர்வாகப் பணிக்குரிய பட்டம் பெற்றவர், பஸ் போக்குவரத்து இலாகா நிர்வாகத் தலைவராக (டைரக்டர்) இருந்துவந்தார்.

ஓராண்டிற்கான அந்தக் கௌரவப் பதவிக்கு, சென்னை போலீஸ் இலாகாவின் முன்னாள் தலைவரான ஜெ. தேவசகாயம் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

தலைகீழாக நின்றாலும் நிறவெறியைக் கைவிடமாட்டார்களாம்!

ஜாக்சன், மிஸிஸிபி, ஜன. 19—

"அமெரிக்க சர்க்கார் தலைகீழாக நின்று முயற்சித்தாலும் மிஸிஸிபி மாநிலத்தில் இன ஒதுக்கல் மகான்மையை மாற்ற முடியாது; இங்கு மக்கள், கறுப்பருக்கும் வெள்ளையருக்கும் சரிநிகர் சமானமான இடமளிக்க விரும்பவில்லை"

"நாங்கள் நீக்ரோவர்களை நரபலியிடுவோரல்ல; சமாதான முறையிலேயே இன ஒதுக்கல் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்போம்; இன பேதத்தை ஒழித்துக் கட்ட சுப்ரீம் கோர்ட் தன் தீர்ப்பு மூலம் வற்புறுத்துவதைச் செல்லாததாக்கும் தீர்மானமேதும் இப்பொழுது வேண்டாம்"

என்று, மிஸிஸிபி மாநில கவர்னர் சட்டசபையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ரஷ்யா அளிக்கும் வெள்ள நிவாரணம்

மாஸ்கோ, ஜன. 21—

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால நேர்ந்த பற்றாக்குறையைப் போக்குவதற்கு உதவி செய்வதற்காகச சோவியத் சர்க்கார் உடனடியாக 20-ஆயிரம் டன் கோதுமையை விலைக்கு விற்கத் தீர்மானித்திருக்கிறது என்றும், இந்தக் கோதுமையை ரஷ்யக் கப்பல்களே ஏற்றிக்கொண்டு வருமென்றும் தெரியவருகிறது.

தண்டிக்கப்படுகிறார் பௌஜாதே!

சட்டசபைத் தலைவரை அவதூறு செய்ததாக வழக்கு

பாரிஸ், ஜன. 22—

பிரான்ஸ் நாட்டின் 'வரி எதிர்ப்பு' இயக்கத் தலைவரான எம் பௌஜாதே, முன்னைய தேசிய சட்டசபையின் தலைவரான ஷ்னீடர் மீது அவதூறு செய்ததாக வழக்குத் தொடரப்பட்டு, 5 இலட்சம் 'பிராங்கு' அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஷ்னீடருக்கு மான நஷ்டம் உண்டுபண்ணியதற்கு அடையாள அபராதமாக ஒரு பிராங்கு தரவேண்டும் என்றும், தீர்ப்பை ஐந்து பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டும் என்றும் நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அண்மையில் நடைபெற்ற தேர்தலின்போது பௌஜாதே, சட்டசபைத் தலைவரான ஷ்னீடர், கொலைகளைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டிப் பேசினாராம்.

இதன்பேரிலேயே ஷ்னீடர், பௌஜாதே மீது வழக்குத் தொடர்ந்தாராம்.

பௌஜாதே இயக்கத்தினர் 52 பேர்கள், புதிய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நினைவிலிருக்கலாம்.

இரண்டு இலட்சம் ஆண்டுகளில்

நாகரீக வளர்ச்சி

வடநாட்டில் விளக்க கண்காட்சி

பூனா, ஜன. 21—

இரண்டு இலட்சம் ஆண்டுகளில் கலாச்சாரமும், நாகரீகமும் எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன என்பதை விளக்கும் ஒரு புராதன வரலாற்றுக் கண்காட்சி ஆமதநகர் மாவட்டத்தில உள்ள நெவாசா எனும் இடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தக் கண்காட்சி பிப்ரவரி 2-ந் தேதி முதல் 10-ந் தேதி வரையில் நடைபெறுமாம்.

இந்தக் கண்காட்சிக்கு, இங்குள்ள தட்சிணக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

‘எல்லாத் தொழிலையும் தேசீயமயமாக்குவதில் எனக்கு நம்பிக்கையில்லை’

பண்டித நேரு கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 20—

“நாட்டிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளையுமே தேசீய மயமாக்குவதில் எனக்கு நம்பிக்கை இல்லை; அவைகளையெல்லாம்தேசீயமயமாக்கினால், அவற்றிற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்கும். நாம் நமது வருட வருமானத்தை இப்போது நஷ்டஈடு கொடுப்பதற்காக ஏன் செலவிடவேண்டும்?”

என்று, பிரதமர் பண்டித நேரு, தேசிய அபிவிருத்திக் குழுவின் நிரந்தரக் குழுக் கூட்டத்தில் தொழில்களைத் தேசிய மயமாக்குவது பற்றியத் தமது கருத்தைத் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் சொன்னார்:—

“இயந்திரத் தொழில்களை எதிர்த்து நிற்க நிலமும், குடிசைத் தொழில்களும் கூட்டுறவு முறையில் இயங்கினால் போதுமானது நிலமாக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் கூட்டுறவு முறைதான் முடிந்தது; ஏனெனில், பெரிய தொழில்களை எதிர்க்கக் கூட்டுறவு முறை மூலமாகவே இந்தத் தொழில்கள் அனைத்தும் பலம் பெற முடியும். பலம்பொருந்திய மத்திய நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பெரிய தொழிற்சாலைகள் பெறும் அனுகூலங்களை, சிறிய தொழில்களும் தங்களிடையேயுள்ள கூட்டுறவு முறையினால் பெற முடியும்.”

மேலும், பாங்கி, இன்ஷ்யூரன்ஸ் போன்ற தொழில்களெல்லாம் முக்கியத்துவம் பெற்றவையாதலின் அவைகளையெல்லாம் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்றும், தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட மட்டில் சர்க்காரே புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தனியார் துறையுடன் போட்டியிடலாம் என்றும் கூறியிருக்கிறார்.

நன்றி அறிவிப்பு

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பி என்னை மகிழ்வித்த நண்பர்கள் அனைவருக்கும், என் உளம் கனிந்த வாழ்த்துக்களைத் திரும்ப அளிப்பதோடு, என் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்.

1957-ம் ஆண்டில் மலாயாவிற்குச் சுயாட்சி

லண்டன் பேச்சுக்களில் நம்பிக்கை

லண்டன், ஜன. 22—

வரும் 1957-ம் ஆண்டு ஆகஸ்டுத்திங்களில் மலாயாவிற்கு சுதந்திரம் வழங்குவது என்ற பிரிட்டனின் திட்டத்தை முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் ஏற்றுக் கொண்டதாகத் தெரிய வருகிறது.

சில நிபந்தனைகளுடன் வழங்கப்படும் சுய ஆட்சியே முதலில் வழங்கப்படும் என்றும், மலாயா உள்நாட்டு—வெளிநாட்டுப் பாதுகாப்பு இலாகாக்கள் முதலில் மலாயா சர்க்காரிடம் ஒப்படைக்கப்படும் என்றும், சுயாட்சிக்கான நிபந்தனைகள் முழுவதும் நிர்வாக நிலைமைப் பற்றியது மட்டுமே என்றும் கூறப்படுகிறது.

மலாயா சுதந்திரம் பற்றி இங்கு பிரிட்டிஷ் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தும் மலாயா சர்க்கார் பிரதிநிதிகள், தங்கள் முயற்சி முழு வெற்றிதரும் என்றே நம்புவதாகத் தெரிவித்தனர்.

மலாயா சுய ஆட்சிக்கான அரசியல் சட்டத்தை வகுப்பதற்குக் காமன்வெல்த் நாடுகள் உதவும் என்றும், அந்த வேலைதான் இப்போது நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

புயல்—வெள்ள நிவாரண நிதி

தலைமை நிலையத்துக்குக் கிடைத்துள்ள தொகைகளின் விவரம்

தி. மு. கழகம், பீளமேடு	9—0—0
எம் ஆர் இராமகிருட்டிணன், சென்னை	45—4—0
பி. சி. மாணிக்கம், தி. மு கழகம், பாலக்கோடு, சேலம் மா.	85—7—0
தி. மு. கழகம், பால் செட்டிச்சத்திரம்	21—5—0
எம். செங்குட்டுவன், திருப்பூர்	3—0—0

குறிப்பு:—18—1—56-ம் தேதி ‘நம் நாடு’ இதழில் வெளியிட்ட புயல் வெள்ள நிவாரண நிதி வரவுகளில், சென்னை-சூளை வள்ளுவர் நூலகத்தார் அனுப்பியதாக வெளியிட்டிருக்கும் 5-ரூபாயை 15 ரூபாய் எனத் திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.

★

கழக தோழர்கள் காணிக்கை

கோவை மாவட்டம் பீளமேடு தி மு. கழகத் தோழர்களின் சார்பாகப் புயல் நிவாரண நிதிக்காக ரூ. 9-ம், துணிகளும் தலைமைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சென்னைத் தோழர் இராமகிருட்டிணன் அவர்கள் மூலமாகப் புயல் நிவாரண நிதிக்காக ரூ 45—4—0-ம் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை 15-வது வட்ட தி. மு. கழக உறுப்பினரும், முடிதிருத்தத் தொழிலாளருமான தோழர் மு. வெங்கடேசன் அவர்கள் 14—1—56-ல், சென்னையில் நடந்த திராவிடர் திருநாளில் ரூ 9—8—0 புயல் நிவாரணத்திற்காக சென்னை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தார்.

சென்னை-சூளை தி. மு. கழகத் தோழர்கள் த. கந்தசாமி, கி. ராமநாதன், பா. ஆபத்சகாயன், அ. குட்டியப்பன், சு. சுந்தரம், ப. சுப்பையா ஆகியோர் புயல் நிவாரணத்திற்காக நாலு முழம் கைத்தறி வேட்டிகள் 19-ம், சேலை 1-ம் ஆக மொத்தம் 20 துணிகளை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தனர்.

★

பாலக்கோடு

சேலம் மாவட்டம் பாலக்கோடு தி. மு. கழகச் செயலாளர் பி. சி. மாணிக்கம், கிளைக் கழகச் சார்பில் ரூ. 86-12-0-ம், சில துணிகளும் வசூலித்து, மணியார்டர் கமிஷன் போக மீதி ரூ 85-7-0 தலைமைக் கழகத்திற்கு அனுப்பியுள்ளார்

கொட்டாம்பட்டி

17-1-56ல் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டிவீதியிலும், கடைத்தெரு வகுதி நிலையங்களிலும் கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் கழகத் தோழர்கள் திரட்டிய ரூ. 19-8-3-ம், 18-1-56-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வசூலான ரூ 4-1-9-ம் சேர்த்து ரூ. 23-10-0-ம் மதுரை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கண்ணமூச்சி

கண்ணமூச்சி கிராம (மேட்டூர் அணை) தி. மு. கழகத் தோழர்கள் செட்டியூர், காவலாண்டியூர் ஆகிய ஊர்களுக்குச் சென்று வீடு வீடாகச் சென்று புயல் நிவாரண நிதி திரட்டினர். 15-1-56ல் ரூ. 8-3-0 வசூலாயிற்று. அடுத்தநாள் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வசூலான ரூ. 4-ம் சேர்த்து ரூ 12-3-0 திரட்டப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் நிதி திரட்டி வருவதாக கிளைக் கழகச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

இராமச்சந்திரபுரம்—பெங்களூர்

15-1-56-ல், பெங்களூர்மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எல். வி. பதி அவர்களிடம் இராமச்சந்திரபுரம் தி. மு. கழகச் சார்பில் ரொக்கம் ரூ 19-5-0-ம், 34½ சேர் அரிசியும், 16 சேர் மாவும், 4 சேர் கேழ்வரகும், 2 பழைய துணிகளும் ஒப்படைக்கப்பட்டன.

காங்கிரஸ் கோஷ்டிச் சண்டையின் விளைவு

பஞ்சாப் மாநிலத்தில் புதிய மந்திரி சபை

மக்கள் குறைகளைத் தீர்க்க ஒன்பது அம்சத் திட்டமாம்

சாந்திகார், ஜன. 21—

பஞ்சாப் சட்டசபைக் காங்கிரசில் நிலவும் ‘கோஷ்டிச் சண்டை’யின் காரணமாகப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் மந்திரி சபையின் தலைவரான பீம்சேன் சச்சாருக்குப் பதிலாக, அந்த மந்திரி சபையில் அபிவிருத்தித் துறை அமைச்சராயிருந்த சர்தார் பிரதாப் சிங் கெய்ரான், பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராக இன்று ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பின்னர் அவரை, கவர்னரான சி. பி. என். சிங் அழைத்து மந்திரி சபை அமைக்குமாறு கோரியிருக்கிறாராம்.

55 வயதான கெய்ரான் பெயரை, பதவியிலிருந்து விலகிக் கொள்ளும் பீம்சேன் சச்சாரே முன்மொழிந்ததாயும், தொடர்ந்து பலர் வழிமொழிய அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாயும் தெரிய வருகிறது.

மாநிலத்தில் பல வகுப்பாரிடையேயும் சுமுகமான உறவு நிலவச் செய்யவும், பொதுமக்களின் குறைகளை நீக்குவதும் தான் சர்க்காரின் முதல் வேலையாக இருக்கும் என்று புதிய முதன் மந்திரி தெரிவித்திருக்கிறாராம்.

தனது மந்திரி சபை சாதிக்கப் போவது என்று கூறி, ஒன்பது அம்சத் திட்டம் ஒன்றை அவர் வெளியிட்டிருக்கிறாராம்.

‘பசு வதை’யைத் தடை செய்வது, இலஞ்ச ஊழலை ஒழிப்பது, நிர்வாகத்தினரின் உறக்கத்தைக் கலைப்பது, தொழிலாளரின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வது, கிராம நிர்வாகத்திலிருந்து இதர எல்லா நிலைகளிலும் பொதுமக்களின் கூட்டுறவை உறுதி செய்வது, அதிகாரிகளுக்கும்—மக்களுக்குமிடையில் உள்ள இடைவெளியைக் குறைப்பது, பொதுமக்கள் பணம் வீண்செலவாகிப் பாழாகாமல் விழிப்புடன் பாதுகாப்பது போன்றவை அந்த ஒன்பது அம்சத் திட்டத்தினுள் அடங்குகின்றனவாம்.

கட்சிக் கூட்டத்தில் பேசிய விலகும் முதன் மந்திரி சச்சார், தனக்குப் பிரதமர் நேருவிடமிருந்து கிடைத்துள்ள கடிதத்தில், அவர் தனது மந்திரிசபை, மாநிலத்தின் பல துறைகளிலும் கடந்த காலத்தில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் காட்டியதற்காகப் பாராட்டியிருப்பதாகக் குறிப்பிட்டாராம்.

சர்க்கார் நிர்வாக இயந்திரம்

வழிபட வேண்டிய தெய்வமாம்!

சாந்திகார், ஜன. 21—

“நிர்வாக இயந்திரம் தேவதையாக வழிபடவேண்டிய ஒன்றே தவிர தண்டிக்கப்பட வேண்டிய —கண்டிக்கப்படவேண்டிய ஒன்றல்ல; நான் எப்போதும் சர்க்கார் அலுவலக ஊழியர்களிடத்தில் பெருமதிப்புக்கொண்டவனாக இருந்துவந்திருக்கிறேன்.

“உயர்ந்த பீடத்திலிருக்கும் தேவதையாகத்தான் சர்க்கார் ஊழியத்தை மதிக்க வேண்டும்,”

என்று, பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார், சர்க்கார் ஊழியர்கள் நடத்திய வழியனுப்புக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

‘தொடர்ந்து ஆங்கிலமே போதனை மொழியாக இருக்க வேண்டும்’

பல்கலைக் கழக ‘போர்டு’ தலைவர் கருத்து

அலிகார், ஜன. 18—

“நவீனக் கல்விக்கு வேண்டிய அளவுக்கு எல்லாப் பாடங்களையும் போதிக்கக்கூடிய நிலைமைக்கு நாட்டின் வட்டார மொழிகள் அபிவிருத்தி அடையும் வரையில், பல்கலைக் கழகங்களில் ஆங்கிலமே போதனை மொழியாக இருக்க வேண்டும்,”

என்று, பல்கலைக் கழகங்களின் போர்டு தலைவர் திவான் ஆனந்த குமார் குறிப்பிட்டுள்ளார்.

போர்டின் வருடாந்திரக் கூட்டத்தில் அவர் தலைமையுரை ஆற்றுகையில், அவர் மேலும் சொன்னார்:

“ஒவ்வொரு மாநிலமும் அவைகளின் பல்கலைக் கழகங்களில், வட்டார அல்லது தாய் மொழியில் சரித்திரம், விஞ்ஞானம் போன்றவைகளைப் போதிக்க வேண்டுமானால் இந்த மொழிகளில் இப்பாடங்களுக்குத் தேவையான அளவு நூல்கள் உள்ளனவா என்பதை முதலில் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்திய மொழிகளில் கவிதைகள், இலக்கியச் செல்வங்கள் இருந்தபோதிலும், நவீன அறிவுக் கலைகளில் போதிய நூல்கள் இருக்கவில்லை. நாம் தாய் மொழி போதனை பற்றி யோசிக்கு முன், இந்நூல்கள் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும்; அதற்குப் பற்பல ஆண்டுகள் பிடிக்கும்.

“ஆங்காங்கு தாய் மொழியிலேயே போதனை நடைபெற்றால் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கோ, அல்லது இந்தியாவுக்கும் — வெளிநாடுகளுக்கும் இடையேயோ சிந்தனைகள் பரவுவதற்கு இயலாது. அறிவு வளர்ச்சிக்கும், மாணவர் முன்னேற்றத்துக்கும் இவ்விதம் சிந்தனைகள் பரிமாறிக்கொள்வது அவசியமாகும்

“உச்சநிலையில் விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்நாளில், காலமும் தூரமும் குறைந்து, உலகம் சுருங்கி வருகிறது; ஆகவே, உலகிலிருந்து இந்தியா தனித்து நிற்க முடியாது. எனவே, நாம் பிறரை அறியவும், நம்மைப் பிறர் அறியவும் ஆங்கிலம் முக்கிய சாதனமாகும்.

“பல்கலைக் கழகங்களுக்கு மற்றொரு முக்கியப் பிரச்சினையும் உண்டு; மாணவர்களுக்குப் புதுப் பளுவை சுமத்தாமலும், கல்வியின் தரத்தைக் குறைக்காமலும், மொழி இலக்கியம் பயிலும் மாணவர் சிறிதளவு விஞ்ஞான அறிவு பெறவும் விஞ்ஞானம் பயிலும் மாணவர் பிற கலைகளில் ஓரளவு அறிவு பெறவும், வழிசெய்ய எப்படிப் புதுப்பாடங்களைச் சேர்ப்பது என்பதே பல்கலைக் கழகங்களின் பிரச்சினை; அதாவது, தேறிச் செல்பவர்கள் வருமானத்துக்கு வழிதேடிக்கொள்வதுடன், பண்புற வாழும் முறை தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதே நோக்கம்.”

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம் : அறிக்கை—2/56

கழகம் நிறுவுவோர் கவனிக்க

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரால் முக்கியக் கிளைகளும், மாணவக் கிளைகளும் மட்டும்தான் ஆங்காங்கு அமையலாமே ஒழிய, வேறு எந்தப் பெயராலும் அமைத்தல் கூடாது.

இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம் என்றும் சிற்சில இடங்களில் சிலர் அமைத்திருப்பதாகத் தெரியவருகிறது. அத்தகைய அமைப்புகள் நமக்கு உடன்பாடுடையன அல்ல. இளைஞர் பெயரால் தி. மு. க. அமைப்புக்கு அவசியமில்லை.

கழகத் தோழர்களும், கழகச் சொற்பொழிவாளர்களும் அத்தகைய அமைப்புகளுக்கு ஆதரவு தரவேண்டாம்.

‘அறிவகம்” சென்னை-13 23—1—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடார்க்காடு மாவட்ட தி. மு. கழக (கிளை) தோழர்கட்கு

“உறுப்பினர்கள் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் எல்லாக் கிளைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்காத கிளைக் கழகங்கள், இன்னும் தேவைப்படும் கழகங்கள், புதியதாக கழகம் துவக்க விரும்புவோர் உடனடியாக எனக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். கிளைக் கழகத் தோழர்கள் உறுப்பினர்களை அதிகப்படியாக சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன். பூர்த்தி செய்யப்பட்ட தாள்களை உடனடியாகத் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்கவும். நாட்கள் குறைவாக இருப்பதால் தோழர்கள் தீவிர முயற்சி எடுத்து, அதிக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுகிறேன்,”

என்று, வடார்க்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

‘இந்திக் குழுவின் முடிவு வருமுன் மத்திய சர்க்கார் கொள்கையை விளக்க வேண்டும்’

‘இந்தி கட்டாயமில்லை என்றால் இந்தி தேவையில்லை என்றே பொருள்’

‘ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருக்கலாம்’

ஆச்சாரியாரின் புதிய கருத்து

“அநேக மொழிகள் பேசப்படுவதும், பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றதுமான அமெரிக்காவின் ஆட்சி மொழியே ஆங்கிலமாகத்தான் இருந்துவருகிறது எல்லோருக்கும் ஆங்கிலம் கட்டாயமாகப் போதிக்கப்படுகிறது. மேலும், நார்வே சுவிடன், மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளிலும்கூட இவ்விதமே செய்யப்படுகிறது.

“இந்திய மக்கள், சென்ற இரு நூற்றாண்டுகளாக ஆங்கிலத்தைக் கற்றுத் தீவிரமாக உபயோகித்து வந்திருக்கின்றனர். மேலும், படித்த இந்தியர்களுக்குள் பொதுவான மொழியாயிருப்பது ஆங்கிலமே; ஆகவே, கையிலிருப்பதை விட்டுவிட்டுப் புதியதொன்றுக்கு ஆசைப்படுவது ஏனோ?

“மாநிலங்களுக்கிடையேயும், மாநிலங்களுக்கும்—மத்திய சர்க்காருக்குமிடையேயும் ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்து நடைபெற்றால் தென்னிந்தியாவுக்குப் பாதகமேற்படாது; ஆனால், இந்தியில் நடைபெற்றால் தெற்கிலுள்ள மாநிலங்கள், இந்தி மொழி நன்றாகத் தெரிந்தவர்களின் உதவியைக்கொண்டு தான் நிர்வாகத்தை நடத்தமுடியும்; வெளி மாநிலங்களிலிருந்து அதிகாரிகளைக் கொண்டுவர வேண்டியதும் அவசியமாகும். இதனால், எந்தவிதமான வசதிக் குறைபாடுகளும், தவறுகளும் ஏற்படுமென்பது தெளிவு. தென்னிந்திய மாநிலங்கள் தங்களுடைய நலன்களைக் கருதி, மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே நீடிக்க வேண்டுமெனக் கோர வேண்டும்.”

—இவ்வாறு, சென்னை முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார் அவர்கள், சென்னையிலிருந்து வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகையொன்றில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் எழுதியிருப்பதாவது:—

“இந்தியாவில் ஆங்கிலத்தை வைத்துக்கொள்வதால் கௌரவம் குறைந்துவிடாது. இந்தியர்களிடையே ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்கள் அநேகமிருக்கின்றன அவைகளை இன்னும் கைக்கொள்ளுவது கௌரவக் குறைவில்லை என்றால், இந்தியர்கள், சிறிதளவு பாண்டித்தியம் பெற்றுள்ள ஆங்கில மொழியை வைத்துக்கொள்வதால் கௌரவம் குறைந்துவிடும் என்று வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை.

“தெற்கில் இந்தியை ஆட்சி மொழியாக்கச் சில குறைபாடுகள் உள்ளன. சர்க்காருக்கும் மக்களுக்கும் பொதுவான ஒரு ஆட்சி மொழி இருப்பதால் பயனுண்டு என்பது உண்மைதான். ஆனால் இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழியாக்குவதினால் தென்னிந்தியாவுக்கு இந்தப் பயன் கிடைக்காது; இந்தி பேசப்படும் பகுதிகளுக்குத்தான் நன்மை ஏற்படும். இதனால் பாரபட்சம் காட்ட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே மாநில சர்க்கார்களின் உள்நாட்டு விவகாரங்கள் பிரதேச மொழியில் நடைபெறுவதுதான் விரும்பத்தக்கது.

“சிலர் கூறிய சாட்சியத்தின் அடிப்படையில், தெற்கில் இந்தியைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்ற தப்பான கருத்துக்கு வந்துவிட்டதோ என அஞ்சுகிறேன். ஏனெனில் இதர பள்ளிகளில் இடம் கிடைக்காத சில சிறுவர் சிறுமியர் வேலை பெறுவதற்காகவோ அல்லது சில பரீட்சைகளில் தேறுவதற்காகவோ இந்தியைக் கற்று நற்சாட்சிப் பத்திரங்களைப் பெறுகின்றனர். ஆனால் இந்த அளவு இந்தி அறிவு சர்க்கார் நிர்வாகத்திற்குப் பயன்படாது. பள்ளிகளில் கட்டாயப்படுத்தாதிருந்தும் தெற்கில் இந்தி பரவிவிட்டதாக நினைப்பது தவறான கருத்தாகும்.

“இந்தி கற்றுக்கொள்வது மக்களின் விருப்பத்திற்கு விட்டுவிட்டால் ஏதோ ஒரு சிலர்தான் அதைப் படிப்பார்கள். அவர்கள் மட்டும்தான் பயனடைவார்கள்—மற்றவர்கள் துன்பப்படுவார்கள். ஆங்கிலம் விஷயத்திலும் ஆரம்பத்தில் இவ்விதமாகவே இருந்தது. எந்த ஒரு வேலையிலும் எல்லோரும் திறமையடைய வேண்டுமானால் கட்டாயப்படுத்துவது அவசியம். இதற்காகச் சந்தேகத்திற்கு இடமளிக்கும் முறைகளை உபயோகிப்பதால் பலன்கள் நீடித்து நிலைக்காது. அதனால் சிக்கல்களும் கஷ்டங்களும் ஏற்படும்.

“‘பள்ளிகளில் இந்தி கட்டாயமாகப் போதிக்கக்கூடாது’ என்று சொல்வதானது, ‘எங்களுக்கு இந்தி தேவையில்லை’ என்று சொல்வதாகத்தான் பொருள்படும்.

“மொழிப் பிரச்சினையில் மக்கள் கவனமாக இருக்கவேண்டும். தற்போது ஏதாவது தவறு செய்துவிட்டால் அதைச் சரிப்படுத்த முடியாமல் சகித்துக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

“இதைப் பற்றிய சர்ச்சை வளர்ந்துகொண்டே இருக்கையில், முடிவு செய்யவேண்டிய உரிமை அதிக தூரத்திலிருப்பவர்களிடம் இருக்கிறது. அவர்கள் முடிவு செய்வதில் தப்பிதம் ஏற்பட்டுவிட்டால் தென்னிந்தியாதான் அதனால் பாதிக்கப்படும்.

“ஆட்சி மொழிப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகவும், ஆகவே தனிப்பட்டவர்கள் என்னதான் தங்கள் கருத்தைக் கூறினாலும் பயனில்லை என்றும் சிலர் நினைக்கிறார்கள். அவ்விதம் பயப்பட வேண்டியதற்கு ஆதாரமே கிடையாது. இந்தப் பிரச்சினையைப் பற்றி விசாரிக்க குழு நியமிக்கப்பட்டதே இதில் சர்க்கார் ஒரு முடிவுக்கும் வரவில்லை என்பதற்குப் போதுமான சான்றாகும். ஆகவே இதில் சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு தங்களுடைய கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவது நாட்டின் நலனில் அக்கரை கொண்டோரது கடமையாகும்.”

பொங்கல் விழா

26—1—56 *மாலை 2 மணிக்கு, குடியாத்தம் டவுன், புதுப்பேட்டை பிள்ளையார் கோவில் வீதியில், புதுப்பேட்டை இளைஞர்கள் சார்பில் நடைபெறும். மாலை 3 மணிக்கு, தோழர் டி. ஏ. ஆதிமூலம் தலைமையில் சிலம்பு விளையாட்டுகள் நடைபெறும். மாலை 6 மணிக்கு, தோழர் ஏ. எம். ராமலிங்கம் தலைமையில், தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, மா. இளஞ்செழியன், கூத்தரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர் இரவு 9-15 மணிக்கு, தோழர் டி. வி. கண்ணப்பன் அவர்களால் புல்லாங்குழல் கச்சேரி நடைபெறும்.*

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

“26—1—56 பிற்பகல் 4 மணிக்கு, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், பிளாக்பள்ளி தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, மாவட்டக் கழகத்தின் சென்ற ஆறு மாதத்திய வரவு-செலவு கணக்குகள், மத்தியக் கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்தல், பொதுக்குழுவிற்குப் பிரதிநிதிகளை அனுப்புதல் ஆகிய பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்படும்,”

என்று, பெங்களூர் மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி அறிவிக்கிறார்.

இரு மொழி மாநில அமைப்பு எல்லைச் சிக்கலைத் தீர்க்குமாம்

‘இந்திய ஒற்றுமை’யை வளர்க்குமாம்!

காங்கிரசின் புதிய சித்தாந்தம்

புதுடில்லி, ஜன. 23—

மேற்கு வங்கம், பீகார் ஆகிய இரு மாநிலங்களையும் இணைத்து ஒரே மாநிலமாக உருவாக்குவதென இரு மாநில முதன் மந்திரிகளான டாக்டர் பி. சி. ராய், ஸ்ரீகிருஷ்ண சின்ஹா ஆகிய இருவரும் இன்று கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனராம்.

இவர்களது கூட்டறிக்கையைக் காங்கிரஸ் செயற்குழு பரிசீலித்துப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றதாம்.

புதிய மாநிலம் ‘பூர்வ பிரதேஷ்’ (கிழக்குப் பிரதேசம்) என்று அழைக்கப்படலாம் எனத் தெரிய வருகிறதாம்.

பண்டித நேரு, தன் சகாக்களின் முடிவு குறித்துப் பெருமிதப்பட்டாராம்!

“வங்காளமும்—பீகாரும் சிறிது காலத்திற்கு முன் ஒரே மாகாணமாயிருந்தவை; எனவே, மனமகிழ்ச்சியுடன் தன்னிச்சையாக இணைவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவது கடினமானதல்ல; நாங்கள் இருவரும் தன்னிச்சையாகவே இந்த முக்கியமான முடிவுக்கு வந்தோம்; இந்தத் தீர்மானம் இரு மாநில மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதுடன், பெரும் வாழ்விற்கும் மகத்தான சுபீட்சத்திற்கும் வழிகோலும் என்பதிலும் ஐயமில்லை;

“இந்தியாவின் ஒற்றுமைப் பிரச்சினையில், ஆக்க முறையில் முயற்சிக்க வேண்டும் என்று கூறும் செயற்குழுத் தீர்மானத்திற்கு இது குறிப்பிடத்தகுந்த உதாரணமாகவும் இருக்கும்”

என்று, இரு மாநில முதன் மந்திரிகளும் தங்களின் கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனராம்.

தேசிய ஒற்றுமை, பொருளாதார நன்மை ஆகியவற்றை முக்கியமான காரணங்களாகக் காட்டி ராயும் - சின்ஹாவும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் அவர்கள் கையொப்பமிருந்தாலும், நகல் தயாரிப்பில் ‘நேருஜி’யின் முத்திரை சந்தேகமறக் காணப்படுகிறதாம்!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தோழர்களின் ஆர்வத்தைப் பாராட்டும்வகையில் பொதுச்செயலாளர் பலருக்குக் கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்.

★

சென்னை தியாகராயர் கல்லூரியில் நடைபெறும் கலைவிழா சம்பந்தமாகத் தோழர் அறிவழகன் (விரிவுரையாளர்) அவர்கள் பொதுச்செயலாளருடன் கலந்துரையாடினார்.

நாளை ஆர்ப்பாட்டம்

ஜன. 26: ‘துக்க நாள்’!

சென்னை, ஜன. 24—

டெல்லி சர்க்கார் தமிழர்களுக்கு இழைத்துள்ள அநீதியைக் கண்டிக்கும் நோக்குடன், சென்னை சட்டசபை நாளையதினம் கூடும் போது, சட்டசபை முன்பாகக் கூடி தமிழரசுக் கழகத் தோழர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

வரும் ஜனவரி 26-ந் தேதி துக்க நாளாகக் கொண்டாடப்படும்; அன்று குடியரசு தின அணிவகுப்பு மரியாதையை ஏற்பதற்காகச் சென்னை கவர்னர் ‘ஐலண்டு’ மைதானம் வரும்போது, அவர் முன்பாகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

“மத்திய சர்க்காரிடம் தேவிகுளம், பீர்மேடு சிக்கலை மீண்டும் எடுத்துச் சொல்லுவோம்’—என்று, சென்னை சர்க்கார் தெரிவிக்கும் வரையில், ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெறும்.”

இந்தத் தகவல்களைத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. நேற்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார்.

ஒரிசா மாநிலத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

கட்டாக், ஜன. 23—

பம்பாய் ‘அமைதி’ பெற்று வருவதாகச் செய்தி வரும் நேரத்தில் ஒரிசா மக்கள் கொதிப்படைந்திருப்பது பற்றிய செய்தி தரப்படுகிறது—இங்கிருந்து!

கடந்த மூன்று நாட்களாக ஒரிசா முழுவதிலும் நடைபெற்றுக் கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்கள் இன்று வேகமாக வளர்ந்தன.

வளர்ந்துள்ள நிலையைச் சமாளிப்பதற்காக இராணுவத்தினர் தயாராக இருக்கும்படி கோரப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது.

டெல்லி சென்றிருந்த முதன் மந்திரி அவசர அவசரமாகக் கட்டாக் திரும்பியுள்ளார்.

வானொலி நிலையம், மற்றும் இரயில் நிலையங்களைத்தான் குறியிடங்களாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கொண்டிருந்தனர், கடந்த நாட்களில்; ஆனால், இப்போது, மந்திரிகளின் வீடுகள் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனராம்.

பூரி நகர் இரயில் நிலையத்தில் கொதிப்புற்ற — ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் தீ வைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும், அந்தக் கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாயும், இதனால் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 60 பேர்வரை காயமுற்றனர் என்றும் தெரியவருகிறது.

மாவட்ட சிறைக்கூடம் மீது ஒரு கூட்டம் படையெடுத்து, கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருந்த நால்வரை விடுவித்தது என்றும் கூறப்படுகிறது.

கட்டாக் நகருடன் பூரி நகருக்கு இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதால் நிலைமைகளை முழுவதுமாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை என்றும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம், கட்டாக் வானொலி நிலையத்தை மூடுமாறு கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒரிசா முதன் மந்திரியின் மனைவியாரும் கலந்து கொண்டாராம்.

மதுரையில்

‘நம் நாடு’ விற்பனையாளர்:

★

எஸ். என். பிச்சை,
தம்பி நியூஸ் ஏஜன்சி,
14, வடுகதட்டார சந்து,
கீழ மாசித் தெரு, மதுரை.

திருமணம்

★

26—1—56 *அன்று, ஆயிக்குடியில (திருச்சி மாவட்டம்) தோழர் அள. கருப்பையா இல்லத்தில், தோழர் மு முத்து—தோழியர் மு. மு வே மாரியாயி திருமணம், தோழர் கே. எம். வல்லத்தரசு எம். பி., தலைமையில் நடைபெறும்.*

சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

★

26—1—56 *மாலை 6 மணிக்கு, சென்னை 47-வது வட்ட தி மு கழகச் செயற்குழுக் கூட்டம், சைதை, எண் 95, கடை வீதியில் நடைபெறும்.*

முத்தையா நினைவுப் பள்ளி ஆண்டு விழா

★

26—1—56 *அன்று, சென்னை-சூளை, மாணிக்கச் செட்டித் தெருவில், எஸ் முத்தையா நினைவுப் பள்ளி ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும், தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெறும். தோழர் க அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.*

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.